செய்தி வெளியீடு எண் : 208 நாள் : 01.02.2023

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 30.1.2023 அன்று தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் செயல்பாடுகள், வக்ஃப் சொத்துகளை பாதுகாத்தல், தனியார் சொத்துகளை பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் சிறுபான்மையினருக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக, 1989 ஆம் ஆண்டு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது; 1999 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் பெயரினை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை என மாற்றியமைக்கப்பட்டது; தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது; நலிவடைந்த வக்ஃப் நிறுவனங்களுக்கு பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பதற்காக பெருமராமத்து மானியம் வழங்கப்படும் திட்டம் தொடங்கப்பட்டது; 2007 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு 3.5 சதவீதம் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டது; சிறுபான்மையினர் நல இயக்ககம்

துவங்கப்பட்டது; சிறுபான்மையின மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கபட்டது; தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள்" அமைக்கப்பட்டது; 2009 ஆம் ஆண்டு "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" அமைக்கப்பட்டது; இஸ்லாமிய பள்ளி / கல்லூரி மாணவிகளுக்கென முதன் முறையாக விடுதிகள் தொடங்கப்பட்டது எனவும், சிறுபான்மையினர் நலனுக்காக கடந்த 2 ஆண்டுகளில் அறிவிப்பு செய்து செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து பின்வரும் விவரங்களைத் தெரிவித்தார்.

"ஐந்து மாவட்டங்களில் புதிதாக மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டது; மூன்று மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் துவங்கப்பட்டுள்ளது; உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 10,583 உறுப்பினர்களுக்கு ஐந்து கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன; சிறுபான்மையினருக்கு 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது; தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்குவது; ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு, அருட்சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000 லிருந்து ரூ.60,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது; கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும்

உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களுக்கு நல வாரியம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; சிறுபான்மையினர் நல விடுதிகளை மேம்படுத்தும் விதமாகவும், சிறப்பாக செயல்படும் வகையிலும் விடுதிகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; உலமா ஓய்வூதிய திட்டத்தில் "குடும்ப ஓய்வூதியம்" வழங்கவும், மாற்றுத் திறனாளிகள் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு வயது வரம்பு 40 ஆகவும், பணிக் காலம் 10 ஆகவும் தளர்த்தப்பட்டுள்ளது."

மேலும், 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூ.55.25 கோடி மதிப்பில் கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது; பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின் கீழ், 10 மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், பள்ளிவாசல்கள் / தர்காக்கள், தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான தமிழ்நாடு அரசு மானிய உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், மானியம் 2021-2022 ஆம் ஆண்டில் ஆறு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டில் தொன்மையான பள்ளிவாசல், தர்காக்களை புனரமைக்க ரூ.6 கோடியும், தொன்மையான தேவாலயங்களை புனரமைக்க ரூ.6 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 13.01.2023 அன்று சட்டப்பேரவையில் பள்ளிவாசல்கள், தர்காக்களை

புனரமைக்க வழங்கப்படும் மானியத் தொகை 2023–2024 ஆம் ஆண்டு முதல் ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதற்கான ஆணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் தோற்றம், அமைப்பு, தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது எனவும், வக்ஃப் வாரியத்திற்கு ரூ.2.50 கோடி நிர்வாக மானியம் வழங்கப்படுகிறது எனவும், வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப மானியத் தொகையினை உயர்த்தி வழங்கிட அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும்; தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலக கட்டடம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட ரூ.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதையும், மாதந்தோறும் உலமாக்களுக்கு ரூ.3,000/– ஓய்வூதியம், மாவட்ட காஜிகளுக்கு ரூ.20,000/– மதிப்பூதியம் அரசு வழங்கி வருவதையும் தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள 6,626 வக்ஃப் நிறுவனங்களில், 3,181 வக்ஃப் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள வக்ஃப் நிறுவனங்களை வாரியத்தில் பதிவு செய்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தமிழ்நாட்டில் வக்ஃப் சொத்துக்கள் 63,332 உள்ளன என்றும், இது இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆக்கிரமிப்பிலுள்ள வக்ஃப் சொத்துக்களை மீட்க மேற்கொள்ளப்பட்டு வரப்படும் நடவடிக்கைகளில் தமிழ்நாடு பொது சொத்துக்கள் சட்டம், 1975ன் கீழ் கடந்த ஓராண்டில் ரூ.51.77 கோடி மதிப்பிலான வக்ஃப் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். தனியார் நபர்களின் சொத்துக்களை பத்திரப் பதிவு செய்வதில் திருச்சி, கடலூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சிரமங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வக்ஃப் சொத்துகள் பாதுகாத்தல் மற்றும் தனியார் சொத்துக்களை பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் குறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில், வருவாய்த் துறை செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை செயலாளர், நில நிர்வாக ஆணையர் மற்றும் பதிவுத் துறை தலைவர் ஆகியோருடன் 29.11.2022 அன்று நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் எடுக்கப்பட்ட பின்வரும் முடிவுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

1. வக்ஃபு வாரியத்தின் தரவுகள் குறிப்பிட்ட காலத்திற்குள் புதுப்பிக்கப்பட வேண்டும். வருவாய் பதிவேடுகளுடன் தரவுகள் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும்.

2. வருவாய்த்துறை பதிவேடுகள் மற்றும் வக்ஃபு வாரிய பதிவேடுகளில் சிறிய வேறுபாடுகள் இருப்பின், மாவட்ட ஆட்சியர் அளவில் தீர்வு செய்யப்பட வேண்டும்.

3. மேற்படி வேறுபாடுகள் களைந்த பிறகு, பதிவேடுகள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

4. மாவட்ட அளவில் வருவாய் / வக்ஃபு பதிவேடுகளில் பெரிய அளவில் சிக்கல்கள் / வேறுபாடுகள் இருப்பின் அத்தகைய வழக்குகளை நில நிர்வாக ஆணையர் / நில அளவைத் துறைக்கு (Survey and Settlement) / அரசிற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

5. வக்ஃபு வாரியம் மற்றும் வருவாய்த் துறையின் சட்ட நிலைப்பாட்டில் பெரிய வேறுபாடுகள் இருந்தால் அல்லது சட்டத் துறையின் விளக்கம் தேவைப்பட்டால் அத்தகைய வழக்குகளை பொருத்தமான முடிவுகள் எடுப்பதற்காக மாநில அரசிற்கு பரிந்துரைக்கலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளர் அவர்களின் மேற்கண்ட நடவடிக்கைகளை பாராட்டியதுடன் அதனை தொடர்ந்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்படாத வக்ஃப் நிறுவனங்களை பதிவு செய்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், வக்ஃப் வாரிய சொத்துக்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உலமா நலவாரியத்தில் அதிக உறுப்பினர்களை சேர்க்கவும் உறுப்பினர்கள் புதுப்பித்தல் (Renewal) பணி முறையாக நடைபெற கண்காணிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும், வக்ஃப் வாரிய சொத்துக்களை முறைகேடாக விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கவும், பொது மக்களுடைய தனியார் சொத்துக்களை பத்திர பதிவு செய்வதில் ஏற்படும் பிரச்சனைகளை

மாவட்ட அளவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், சிறுபான்மையினருக்கு 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்திற்கு பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றும், சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கும் குறிப்பாக உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் நிறைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு சிறுபான்மையின மக்களின் நலனில், வக்ஃப் வாரிய செயல்பாடுகளில் அக்கறை கொண்டுள்ளது எனத் தெரிவித்து, இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட பிரச்சனைகளுக்கு குறிப்பாக நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்கு வருவாய்த் துறையுடன் இணைந்து செயலாற்றி தீர்வு காண வேண்டும் எனவும், ஒன்றிய, மாநில அரசுகள் மூலமாக வழங்கப்படும் நிதிகள் முறையாக செலவிடப்பட்டு, சிறுபான்மையின மக்கள் மேம்பாட்டிற்காகவும், வக்ஃப் வாரியத்தின் நிதி நிலையை செம்மைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள். மேலும், சிறுபான்மையினர் நலன்களுக்காக இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக எடுத்து வருகிறது என்றும், அதனை ஆவணபடுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வக்ஃப் வாரியத்தின் சிறப்பான செயல்பாடுகளுக்காக பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்கள்:–

"வக்ஃப் வாரியத்தில், தரவுகளைப் பெற்று, அதன் அடிப்படையில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும்; வக்ஃப் சொத்துகளைப் (Genuine Wakf Properties) பாதுகாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும், தனியார் சொத்துக்களை தடையின்றி பத்திரப் பதிவுசெய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்களின் தரவுகளை கணினிமயமாக்கி மேம்படுத்த வேண்டும், வக்ஃப் வாரியத்தில் காலிப்பணியிடங்களை நிரப்பி வக்ஃப் வாரிய வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், புகார்களின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து, வக்ஃப் வாரிய செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உருவாக்க வேண்டும். மேலும், வக்ஃப் வாரியத்தின் களப்பணியாளர்கள் இச் சமுதாய மக்களுக்கு சேவை செய்யும் வண்ணம் விழிப்புடன் இருந்து முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு அனைவருக்குமான அரசு என்றும், முன்னெடுப்புகள் மற்றும் முன் மொழிவுகளை அரசுக்கு அனுப்பவும் கேட்டுக் கொண்டார்கள். அவற்றை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் முனைவர் சீ. சுரேஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு வக்ஃப் வாரிய அரசு சார் உறுப்பினர் திருமதி மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு. ஏ.பி. ரஃபியுல்லா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in